# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான
# இலகுவழி மாதிரிப் பரீட்சை - 13


**ஆசிரியர் : P.அம்பிகைபாகன்**

**இடம் : ACA, ஆசிரியரின் வீட்டில்**
**குழு வகுப்புக்களில்**


**சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1) தமிழ் மொழியில் உயிர் எழுத்துக்கள் 12 உள்ளன. அதில் இறுதி எழுத்து
   1. அ 2. ஔ 3. ∴

2) 'கீழாறோலை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதினால்
   1. கீழ் + ஆறாவது + ஓலை 2. கீழ் + ஆறு + ஓலை
   3. கீழால் + ஓலை

**வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.**

3) அது குஞ்சுகளுக்கு உணவு ..........................................................
   (ஊட்டுகின்றது / ஊட்டுகின்றன)

4) தம்பி கோயிலுக்குச் ..........................................................
   (சென்றனர் / சென்றான்)

**பெருக்கல் '★' என்னும் குறியினாலும் கூட்டல் '#' என்னும் குறியினாலும் குறிக்கப்படுமாயின் பின்வருவனவற்றின் பெறுமானங்களை வெற்றிடத்தில் எழுதுக.**

5) 4 ★ 3 # 2 = ..........................................................

6) 8 # 2 ★ 2 = ..........................................................

**உருக்களில் நிழற்றப்பட்டுள்ளவற்றை பின்னங்களாக எழுதுக.**

7)  = ..........................................................

8)  = ..........................................................

**வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.**

9) ஐந்து என்னும் இலக்கத்தை மூன்று தடவைகள் எழுதினால் வரும் எண்ணின் பெறுமானம்
   1. 500 இலும் கூடியது 2. 500 இலும் குறைந்தது
   3. 1500 இலும் கூடியது

10) மூன்றின் மடங்குகளாக வரக்கூடிய எண்கள்.
   1. 9, 12, 15, 16 2. 6, 9, 12, 15 3. 6, 12, 18, 22

11) ரூபா 10இல் உள்ள 25 சத நாணயங்களின் எண்ணிக்கை.
   1. 10 2. 20 3. 40

12) திங்கட்கிழமை, புதன்கிழமை, வெள்ளிக்கிழமை, ............................................ என்ற தொடரில் அடுத்து வர வேண்டியது.
   1. சனிக்கிழமை 2. ஞாயிற்றுக்கிழமை 3. திங்கட்கிழமை

13) பழம் என்பதில் வாழைப்பழமும் காய்கறி என்பதில் கத்தரிக்காயும் அடங்குமாயின் தானியம் என்பதில் அடங்கக்கூடியது.
   1. தேங்காய் 2. நெல் 3. கரட்

**வினாக்களின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள படத்துடன் நெருங்கிய தொடர்புடைய மூன்று சொற்கள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க.**

14) 

1. துவிச்சக்கரவண்டி, ஓடும், பாடசாலை
2. சக்கரம், ஆசனம், மணி
3. மணி, தெரு, இரு சக்கரங்கள்

15) 

1. பசு, மிருகம், தும்பிக்கை
2. பால், சாது, குரைக்கும்
3. பால், பசு, மிருகம்

**தரப்பட்டுள்ள சொற்களில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம். அவற்றில் இரண்டு இருக்கும் கூட்டத்திற்கு உரியவை யாவை?**

16) ஆடு, புலி, சிங்கம், பூனை, நாய்

1. ஆடு, புலி  2. பூனை, நாய்  3. புலி, சிங்கம்

17) வாய், கண், இரத்தம், மூக்கு, எலும்பு.

1. மூக்கு, இரத்தம்  2. இரத்தம், எலும்பு  3. வாய், கண்

18) இலங்கை, கொழும்பு, இந்தியா, புதுடெல்லி, பாகிஸ்தான்

1. கொழும்பு, புதுடெல்லி  2. இந்தியா, இலங்கை
3. இந்தியா, பாகிஸ்தான்

19) இந்த உருக்களின் நிரையிலே அடுத்ததாக வரவேண்டிய பொருத்தமான உருவைத் தரப்பட்டுள்ள உருக்களிலிருந்து தெரிவு செய்க.




1 2 3 4

20) இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பொருட்களை இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1. ABC — DEF  2. BCF — ADE  3. ADC — BEF  4. ADF — BCE

21) இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பொருட்களை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



i ii iii iv v vi

இக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.




1 2 3 4

**பின்வரும் பழமொழிகளை பூர்த்தி செய்வதற்கு ஏற்ற முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| | |
|---|---|
| 22) அழுத பிள்ளை .................................................................................. | பயம் அறியாது. |
| 23) ஏழையின் பேச்சு .............................................................................. | சுடுகாடு மட்டும். |
| 24) தொட்டில் பழக்கம்............................................................................. | பால் குடிக்கும். |
| 25) இளங் கன்று..................................................................................... | முளையிலே தெரியும். |
| 26) விளையும் பயிரை.............................................................................. | அம்பலம் ஏறாது. |

**சமமான நான்கு பாகங்களாக பிரிக்கப்படாத உருவின் கீழ்க் கீறிடுக.**

27) 1.  2.  3. 

28) 1.  2.  3. 

| பாடசாலைக்கு வரும் விதம் | எண்ணிக்கை |
|---|---|
| நடந்து | 16 |
| சைக்கிள் | 10 |
| பஸ் | 18 |

29) இத்தகவலை விபரிக்கும் சலாகைக்கோட்டு வரைபின் கீழ் கீறிடுக.







30) அதிக எண்ணிக்கையான செங்கற்களைக் கொண்ட உரு எது?


A


B

1. A 2. B 3. இரண்டும் சமன்

**உவமைத் தொடருக்குப் பொருத்தமான சந்தர்ப்பத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.**

31) இலைமறை காய் போல
1. திறமைகள் மறைந்திருத்தல் 2. பழங்கள் மறைந்திருத்தல்
3. மரங்கள் பெருத்திருத்தல்

32) ஆப்பிழுத்த குரங்கு போல
1. திறமைகளை வெளிக்காட்டுதல் 2. சிக்கலில் மாட்டிக்கொள்ளுதல்
3. ஆபத்திலிருந்து தப்புதல்

33) இலவு காத்த கிளி போல.
1. நம்பியிருந்து ஏமாறுதல் 2. எல்லோரையும் ஏமாற்றுதல்
3. சுதந்திரமாக வாழ்தல்

**சரியான விடையைத் தெரிவு செய்க.**

**அருணன் அமலனிலும் உயரம் கூடியவன். ஆனால் ஆனந்தனிலும் உயரம் குறைந்தவன்.**

34) இவர்களின் உயரங்களை ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்தினால்
1. அருணன், அமலன், ஆனந்தன் 2. ஆனந்தன், அமலன், அருணன்
3. அமலன், அருணன், ஆனந்தன்

‘**எத்தனை விதம் விதமான பழங்களை நீங்கள் எனக்குத் தந்திருக்கிறீர்கள். ஆனாலும் சுதந்திரமாகப் பறந்து திரிந்து மரங்களில் பழுத்திருக்கும் கனிகளைக் கொத்தித் தின்பதிலே கிடைக்கும் சுவை இதிலே கிடைத்திடுமா**’?

35) இவ் அவலக் குரலுக்குரியது யாது?
1. சிறையிலடைக்கப்பட்ட மனிதன். 2. கூண்டில் அடைக்கப்பட்ட கிளி.
3. கூண்டில் அடைக்கப்பட்ட புலி.

36) இலங்கையின் எம்மாகாணத்தில் கொழும்பு அமைந்துள்ளது?
1. வட மாகாணம் 2. கீழ் மாகாணம் 3. மேல் மாகாணம்

37) விவசாயியின் தோழன் என அழைக்கப்படும் மண்ணை வளமாக்கக் கூடிய உயிரினம் எது?
1. பல்லி 2. மண்புழு 3. ஓணான்

**எமது வகுப்பறையை அழகாக்க நாம் செய்ய வேண்டிய கடமைகள் எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகள் திருத்தமாக அமைய வேண்டும்)**

38) ....................................................................................................................................

39) ....................................................................................................................................

40) ....................................................................................................................................